**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 80/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.2(பிரபு)**
**25.02.2025**

**7ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்திற்கும் நான் குடியிருந்துவரும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5 கி.மீ தூரம் இருக்கும். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொந்தமான பட்டா நிலம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சொத்துக்கள் அனைத்தும் முருகனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். முருகனுக்கு கணபதி மற்றும் உலகநாதன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான், மேலும் 2 பேர்கள் இருந்தனர். அவர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. அவர்களுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்று எனக்கு தெரியாது.

3. நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்துக்களை தவிர முருகனுக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்களும் தாவா கிராமத்தில் உள்ளன என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த சொத்துக்கள் சுமாராக எவ்வளவு இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. முருகன் எந்த வருடம் இறந்தார் என்றால் 1984ல் இறந்தார். இவ்வழக்கில் சாட்சி சொல்ல வருவதற்கு முன்பு தாவா சொத்து சம்மந்தமான ஆவணங்கள் எதையும் வாதிகள் என்னிடம் காட்டினார்களா என்றால் இல்லை.

5. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்தின் வருமானம் மற்றும் உலகநாதன், 1ஆம் பிரதிவாதியின் கூட்டு உழைப்பில் வந்த வருமானத்தை கொண்டு முருகன் பெயரில் பெயரளவிற்கு வாங்கப்பட்டது என்று எதன் அடிப்படையில்

சொல்கிறேன் என்றால் ஊரில் சொல்வதை கேட்டதன் அடிப்படையில் சொல்கிறேன். அதுசம்மந்தமான ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

6. மாரியம்மாள் மற்றும் அமராவதி எங்குள்ளார்கள் என்றால், மாரியம்மாள் உயிருடன் இல்லை, அமராவதி எங்கு வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவர்கள் இருவருக்கும் நல்ல சீர் வரிசைகள் செய்து திருமணம் செய்து கொடுத்ததாக சொல்வது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

7. அவர்கள் இருவருக்கும் திருமணமாகி சுமார் 15 ஆண்டுகள் கழித்துதான் நான் பிறந்திருக்க முடியும் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதியும், உலகநாதனும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதற்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் சிட்டாவை பார்த்துள்ளேன். எந்த வருடம் சிட்டாவை பார்த்தேன் என்று தெரியாது. அந்த சிட்டாவில் வழக்கு சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான், ஆனால் எண்ணிக்கை தெரியாது. எத்தனை வருடங்களுக்கு முன்பு அதை பார்த்தேன் என்றால் 10 வருடங்களுக்கு முன்பு பார்த்தேன்.

8. தாவா சொத்துக்களில் உலகநாதன் மற்றும் அவரது வாரிசுகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. உலகநாதனுக்கும், இறந்துபோன 1ஆம் பிரதிவாதி கணபதிக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டு கணபதி பெயருக்கு 30 வருடங்களுக்கு முன்பே சட்டப்படி பட்டா ஏற்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்த சொத்தை 7ஆம் பிரதிவாதி பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

9. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றும், அதை தெரிந்துகொண்டே தாவா சொத்தை பற்றி இதர விசயங்கள் எதுவும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**8ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஓம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.